## துவாக்குடி நகர்மன்றம்

2023ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 13-ம் தேதி செவ்வாய்கிழமை காலை 10.30 மணிக்கு துவாக்குடி நகராட்சி நகர்மன்ற கூட்ட அரங்கில் நடந்த சாதாரணக் கூட்டத்தின் கூட்ட நடவடிக்கை நகல்.

**பொருள் எண். 1**

துவாக்குடி நகராட்சியில் 2023-ம் ஆண்டு டிசம்பர் மாதம் பிறப்பு 4 எண்ணிக்கையும் இறப்பு 15 எண்ணிக்கையும் 2024-ம் ஆண்டு ஜனவரி மாதம் பிறப்பு 3 எண்ணிக்கையும் இறப்பு 13 எண்ணிக்கையும் பதியப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** : மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**ந.க.எண்: 1788 / 2022 / எச்1**

**தீர்மானம் : 472 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 2**

துவாக்குடி நகராட்சி ஆணையர் அவர்களின் டிசம்பர் 2023 மற்றும் ஜனவரி 2024 மாதத்திற்கான தினசரி நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** : மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்

**ந.க.எண்: 54 / 2023 / சி1**

**தீர்மானம் : 473 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 3**

துவாக்குடி நகராட்சி பொறியாளர் அவர்களின் டிசம்பர் 2023 மற்றும் ஜனவரி 2024 மாதத்திற்கான தினசரி நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** :மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**ந.க.எண்: 963 / 2023 / இ1**

**தீர்மானம் : 474 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 4**

துவாக்குடி நகராட்சியில் 2024-25ம் ஆண்டிற்கான திட்ட மதிப்பீடு மற்றும் 2023-24ம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு மன்றத்தின் ஒப்புதலுக்கு.

**அலுவலக குறிப்பு** : மன்றம் ஒப்புதல் வழங்கலாம்

**ந.க.எண் 970/ பி1/2022**

**தீர்மானம் : 475 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 5**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் கடித ந.க.எண்.329/2019/பி1 நாள்.08/09/2023ன் படி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரகம், தஞ்சாவூர் அலுவலக பயன்பாட்டிற்கு புதிய 10 KVA பேட்டரிகள் 24 எண்ணிக்கை கொள்முதல் செய்யப்பட்டதில் 50 சதவீதம் பங்குத் தொகை ரூ.75,811/- (சேவை வரி உட்பட) இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து செலுத்திட கோரி உத்திரவு வரப்பெற்றுள்ளது. எனவே, தொகையினை செலுத்திட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** : - மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண். 297/2024/இ1**

**தீர்மானம் : 476 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 6**

துவாக்குடி நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் திடக்கழிவு மேலாண்மையில் பயன்படுத்தப்பட்டு வந்த உபயோகமற்ற டிராக்டர்கள் மற்றும் பழைய இரும்பு தளவாட சாமான்கள் அனைத்தையும் பொது ஏலம் விடுவதற்கு ஏல அறிவிப்பினை தினசரி நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கு கீழ்கண்டவாறு வரப்பெற்ற பட்டியலின் படி தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | பில்பட்டியல் எண் | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | தினபூமி | 120753 / 14.10.2023 | ரூ.9476/- |

**அலுவலக குறிப்பு** : -

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று தொகை வழங்கியதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண். 202 / 2022 / இ1**

**தீர்மானம் : 477 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 7</u>**

துவாக்குடி நகராட்சியில் பொது நிதி 2023-24-ன் கீழ் கீழ்கண்ட பணி மேற்கொள்ள 30.01.2024-ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

| வ. எண். | வேலையின் விபரம் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.14 அண்ணாநகர் பகுதியில் உள்ள அரசு துவக்கப்பள்ளியில் மின்விளக்கு வசதி செய்து தரும் பணி | 5.60 | M/s. SVS Enterprises<br><br>M/s. Sree Dheeran Builders | மதிப்பீட்டை விட 0.07% குறைவு<br>மதிப்பீட்டை விட 0.25% அதிகம் |

**அலுவலக குறிப்பு** : -

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s. SVS Enterprises (0.07% குறைவு) நிறுவனத்தாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 1879/2023/இ1**

**தீர்மானம் : 478 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 8</u>**

துவாக்குடி நகராட்சியில் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு இணையவழி மூலம் ஒப்பந்தப்புள்ளி பதிவேற்றம் செய்வதற்கு E-Token தேவைப்படுகிறது. இந்நகராட்சி பொறியாளர் மற்றும் பொதுப்பணி மேற்பார்வையாளருக்கு E-Token பெறப்பட்டு 2 வருட கால பயன்பாட்டு அளவு முடிவடைந்துள்ளதால் Digital Identity என்ற நிறுவனத்திடமிருந்து E-Token வாங்குவதற்கு உத்தேச செலவினமாக ரூ.25,000/- நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கும்.

**அலுவலக குறிப்பு** : - மேற்படி " E-Token " வாங்கியதற்கு Digital Identity என்ற நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற பில்பட்டியலில் கண்ட தொகையினை வழங்கியதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண் இ1/1466/2021**

**தீர்மானம் : 479 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 9</u>**

துவாக்குடி நகராட்சியில் அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் குடிநீர் அபிவிருத்தி பணி மேற்கொள்வதற்கு திருச்சி தஞ்சை தேசிய நெடுஞ்சாலை அண்ணாவளைவு பகுதியில் நெடுஞ்சாலையின் குறுக்கே 450MM DIA (37 RM) MS Encasing Pipe பதிப்பதற்கு தேசிய நெடுஞ்சாலைத்துறை தஞ்சாவூர் அவர்களிடம் அனுமதி பெற்று பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.10.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு : -** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண். 1876/2023/இ1**

**தீர்மானம் : 480 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 10</u>**

துவாக்குடி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொது மக்களின் பயன்பாட்டில் உள்ள சமுதாய கழிப்பிடங்கள், பொது கழிப்பிடங்கள் மற்றும் நகராட்சி அலுவலக கழிப்பிடம், அம்மா உணவக கழிப்பிடம், நகராட்சி சமுதாயக்கூட கழிப்பிடங்கள் ஆகியவற்றின் கழிவு நீர் தொட்டிகள் சுத்தம் செய்வதற்குண்டான உத்தேச செலவினம் ரூ. 3.00 இலட்சத்திற்கும்,

மேற்கண்ட செலவினத்தை நகராட்சியின் பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** : -

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் கோரி நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண். 1643 / 2022 / எச்1**

**தீர்மானம் : 481 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 11</u>**

துவாக்குடி நகராட்சி வார்டு எண்.5 கபர்ஸ்தானத்தை சுற்றி மின் விளக்குகள் பொருத்தும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.3.60 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு** : - மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண். 302/2024/இ1**

**தீர்மானம் : 482 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 12</u>**

துவாக்குடி நகராட்சி வார்டு எண்.16 பெல்நகர் திருவள்ளுவர் படிப்பகத்தில் சேதமடைந்துள்ள கழிவுநீர் தொட்டியினை சரிசெய்து கட்டும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ. 2.00 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு** : - மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண். 298/2024/இ1**

**தீர்மானம் : 483 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 13</u>**

துவாக்குடி நகராட்சி வார்டு எண்.21 அங்காளம்மன் கோவில் அருகில் உள்ள சீரணி அரங்கத்தின் பாதுகாப்பு நலன்கருதி சீரணி அரங்க வளாகத்தை சுற்றி மின் விளக்குகள் பொருத்தும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.7.00 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு** : - மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண். 300/2024/இ1**

**தீர்மானம் : 484 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 14</u>**

துவாக்குடி நகராட்சி அலுவலக வளாகத்தில் செயல்படும் இ-சேவை மையத்திற்கு பொதுமக்களின் அத்தியாவசிய தேவையான குடிநீர் வசதி ஏற்படுத்துவதற்காக இ-சேவை மையத்தில் HDPE TANK பொருத்தி குடிநீர் சுத்திகரிப்பான் இயந்திரம் பொருத்தும் பணிக்கு கீழ்கண்ட விவரப்படி விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் விபரம் | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி |
|---|---|---|---|
| 1 | நகராட்சி இ-சேவை மையத்தில் HDPE TANK பொருத்தி பைப் லைன் அமைத்து குடிநீர் சுத்தகரிப்பான் இயந்திரம் நிறுவும் பணி செய்தல் | M/s. KURUNI ENTERPRICES<br>M/s. AQUA CURE 2 PURE TECHNOLOGIES<br>M/s. NRKV TECH | ரூ. 99,382/-<br>ரூ. 1,00,123/-<br>ரூ. 1,03,746/- |

**அலுவலக குறிப்பு**:- மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண். இ1/1881/2023**

**தீர்மானம் : 485 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 15</u>**

துவாக்குடி நகராட்சி வார்டு எண்.14 முத்துராமலிங்க தேவர் சாலையில் உள்ள அங்கன்வாடி மையத்தின் முன்புறம் ஷெட் அமைத்தல் மற்றும் குழந்தைகள்

விளையாடுவதற்கு விளையாட்டு உபகரணங்கள் பொருத்தும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.4.00 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு** : - மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண். 304/2024/இ1**

**தீர்மானம் : 486 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 16**

துவாக்குடி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள அனைத்து வார்டு பொது மக்களும் பயன்பெறும் வகையில் மக்களுடன் முதல்வர் என்ற திட்டத்தில் மக்கள் அவர்கள் வசிப்பிடத்தின் அருகிலேயே கோரிக்கைகளை நிவர்த்தி செய்வதற்கு ஏதுவாக நகராட்சி பகுதியில் நான்கு இடங்களில் மக்களுடன் முதல்வர் முகாம்கள் நடத்துவதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 21335/2021/எம்2 நாள். 14.11.2023 மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திருச்சிராப்பள்ளி அவர்களின் செயல்முறை ந.க.எண். 3058/2023/I2 நாள்.05.12.2023 ஆகியவற்றில் உத்திரவிடப்பட்டுள்ளதை தொடர்ந்து நகராட்சி பகுதியில் நான்கு இடங்களில் 18.12.2023, 21.12.2023, 26.12.2023 மற்றும் 03.01.2024 ஆகிய தேதிகளில் மக்களுடன் முதல்வர் முகாம் நடத்துவதற்கு தேவையான அனைத்து ஏற்பாடுகளும் செய்து தருவதற்கு விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விவரப்படி விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | | எண்ணிக்கை | விலைப்புள்ளி கோருபவரின் பெயர் | | |
|---|---|---|---|---|---|
| | | | M/s. Thamarai Enterprises (Rs.) | Sri Vinayaga Traders (Rs.) | Saram Enviro services PVT Ltd (Rs.) |
| 1 | FAN, LIGHTS AND PLUG POINTS / 4 Camps | 1 | 15000 | 15600 | 15700 |
| 2 | WOODEN TABLE ( PER CAMP - 10 TABLES) / 4 Camps | 40 | 3200 | 3400 | 3600 |
| 3 | STEEL TABLE ( PER CAMP - 40 TABLES) / 4 Camps | 160 | 7200 | 8000 | 8800 |
| 4 | CHAIR ( PER CAMP - 200 CHAIRS) / 4 Camps | 800 | 8000 | 8800 | 9600 |
| 5 | SAMIYANA PANDAL / 4 Camps | 4 | 56000 | 58000 | 60000 |
| 6 | GENERATOR, MIC, SPEAKERS AND FOCUS LIGHTS | 4 | 33200 | 34000 | 34400 |
| 7 | TABLE CLOTH AND FLOOR MAT | 160/8 | 14800 | 15200 | 16100 |
| 8 | WATER ARRANGEMENT ( PER CAMP – 10 CANS) / 4 Camps | 40 | 1600 | 1800 | 2000 |
| 9 | FOOD / 4 Camps | 800 | 272000 | 288000 | 304000 |
| 10 | TEA, SNACKS / 4 Camps | 800 | 32000 | 33000 | 34000 |
| 11 | NOTICE / FLEX BANER WITH FRAME / POSTERS | 8000/ 10/200 | 131000 | 137200 | 140800 |
| 12 | COMPUTERS AND PRINTERS SUPPLY (RENTAL) | 40/20 | 130000 | 136000 | 142000 |

மேற்கண்டவாறு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள M/s. தாமரை எண்டர்பிரைசஸ், திருச்சி நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** : -

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி முகாம் நடத்துவதற்கான பணிகள் உடன் மேற்கொள்ள வேண்டியுள்ளதால் நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதற்கும், செலவினம் மேற்கொண்டதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண். 1767/2023/சி1**

**தீர்மானம் : 487 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 17</u>**

துவாக்குடி நகராட்சி பகுதியில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான கட்டிடங்கள் மற்றும் பள்ளிகூடங்களின் சுற்றுசுவர்களில் சுவரொட்டிகள் மற்றும் விளம்பரங்கள் ஒட்டுவதை தவிர்க்கும் பொருட்டு தமிழரின் பழம்பெருமையினை எடுத்துரைக்கும் விதமாக சுற்றுசுவர்களில் வர்ணம் பூசுதல் மற்றும் ஓவியம் வரைதல் பணிக்கு 1 சதுர மீட்டருக்கு ரூ.685/- மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு** : - மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண். 305/2024/இ1**

**தீர்மானம் : 488 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 18</u>**

துவாக்குடி நகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள கீழ்நிலை நீர்த்தேக்கத்தொட்டியில் அருகில் மூங்கில் மர வேர்கள் நுழைந்து அதனை சுத்தம் செய்ய இயலாத நிலையில் மிகவும் பழுதடைந்துள்ளதால் சுகாதார கேடு ஏற்படும் நிலையில் உள்ளதால் அதன் அருகில் புதிய HDPE TANK பொருத்தி அதில் நீர் நிரப்பி அலுவலகத்தின் நீர்த்தேக்கத்தொட்டிக்கு ஏற்றும் பணி மேற்கொள்ள உண்டான உத்தேச செலவினம் ரூ.1.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு**:-

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் கோரி நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண். இ1/1890/2023**

**தீர்மானம் : 489 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 19</u>**

துவாக்குடி நகராட்சியில் அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் குடிநீர் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ள ரூ.2135.00 இலட்சத்திற்கு (GOI - Rs.1068.00 Lakh, GoTN - Rs.6.41 lakh, KNMT - Rs. 213.00 Lakh, SUIDF - Rs. 213.00 Lakh) நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் தற்போது நடைபெற்று வருகிறது. மேற்படி ஒதுக்கீடு செய்யப்பட்ட மாநில நகர்ப்புற உள் கட்டமைப்பு மேம்பாட்டு நிதி 10 சதவீதம் தொகை ரூ.213.00 இலட்சம் தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டு கழகம் லிமிடெட் (TUFIDCO) நிறுவனத்திடமிருந்து தொகை பெறுவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு** : - மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண். 984/2022/இ1**

**தீர்மானம் : 490 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 20</u>**

துவாக்குடி நகராட்சி வார்டு எண்.19 ராவுத்தான் மேடு பகுதியில் உள்ள சமுதாய கூடத்தின் பாதுகாப்பு கருதி ஏற்கனவே வடக்கு மற்றும் கிழக்கு பகுதியில் சுற்றுசுவர் கட்டியது போக மீதமுள்ள வடகிழக்கு பகுதியில் சுற்றுச்சுவர் கட்டும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.15.00 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு** : - மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண். 306/2024/இ1**

**தீர்மானம் : 491 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 21</u>**

துவாக்குடி நகராட்சி வார்டு எண்.7 ஜிம்மா பள்ளிவாசல் கபர்ஸ்தான வளாகத்தினை சுற்றி மின் விளக்குகள் பொருத்தும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.2.45 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு** : - மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண். 301/2024/இ1**

**தீர்மானம் : 492 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 22</u>**

துவாக்குடி நகராட்சி அலுவலகத்தில் உள்ள இ சேவை மையம் கட்டிடத்தில் நகராட்சியில் பணிபுரியும் ஓட்டுநர்களுக்கு ஓட்டுநர் அறையாக பிரிவு (PARTITION) செய்யும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.50,000/- மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு : -** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண். 303/2024/இ1**

**தீர்மானம் : 493 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 23</u>**

துவாக்குடி நகராட்சியில் பொது நிதி 2023-24-ன் கீழ் கீழ்கண்ட பணி மேற்கொள்ள 29.01.2024-ம் தேதி இணைய வழியே ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

| வ. எண். | வேலையின் விபரம் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.16 இந்திரா நகர் (முன்னாள் இராணுவத்தினர் காலணி) பகுதியில் புதியதாக கட்டப்படும் அங்கன்வாடி மையத்தை சுற்றி சுற்றுசுவர் மற்றும் பேவர் ப்ளாக் தரைதளம் அமைக்கும் பணி | 20.00 | திரு.எம்.பொன்னுசாமி<br><br>திரு.கே.ஜெயராமன் | மதிப்பீட்டை விட 0.05% குறைவு<br><br>மதிப்பீட்டை விட 3.12% அதிகம் |

**அலுவலக குறிப்பு : -**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.எம்.பொன்னுசாமி (0.05% குறைவு) என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.** இ1/1877/2023

**தீர்மானம் : 494 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 24</u>**

இந்நகராட்சி பகுதியில் உள்ள சமுதாய கழிப்பிடங்கள் மற்றும் பொது கழிப்பிடங்களில் உள்ள கழிவுநீர் நச்சுத்தொட்டிகளில் நிரம்பியுள்ள கழிவுநீரினை அகற்ற 05.01.2024-ம் தேதி விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு மூன்று நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ எண். | விவரம் | Thamarai Enterprises | Saram Enviro service Pvt., Ltd., | shari vinayaga Traders |
|---|---|---|---|---|
| 1 | 6000 லிட்டர் கொள்ளளவு கொண்ட செப்டிக் டேங்க் லாரி மூலம் சுத்தம் செய்ய நடை ஒன்றுக்கு | Rs.3400 | Rs.3500 | Rs.3550 |

**அலுவலக குறிப்பு : -**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதற்கும் செலவினம் மேற்கொண்டதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண். 1643 / 2022 / எச்1**

**தீர்மானம் : 495 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 25</u>**

துவாக்குடி நகராட்சியின் பொது சுகாதார பிரிவில் நோய் தடுப்பு பணிகள் மேற்கொள்ள 2023-24ம் நிதியாண்டிற்கு தேவையான கிருமி நாசினிகள் வாங்குவதற்குண்டான உத்தேச செலவினம் ரூ.3.00 இலட்சத்திற்கும், மேற்கண்ட செலவினத்தை நகராட்சியின் பொது நிதியின் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு** : -

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதற்கும் நடவடிக்கை மேற்கொண்டதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண். 791/2023/எச்1**

**தீர்மானம் : 496 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 26</u>**

துவாக்குடி பேரூராட்சியிலிருந்து நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு வரப்பெற்ற அரசாணை விபரம் மற்றும் நகராட்சியில் பணிபுரிந்த ஆணையர்கள் மற்றும் நகராட்சியில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நகர்மன்ற தலைவர்கள் விவரத்தினை மரப்பலகையில் எழுதி நகராட்சி அலுவலகத்தில் வைப்பதற்குண்டான உத்தேச செலவினம் ரூ.60,000/-க்கும், மேற்கண்ட செலவினத்தை நகராட்சியின் பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு** : -

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதற்கும் நடவடிக்கை மேற்கொண்டதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.287/2024/எச்1**

**தீர்மானம் : 497 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 27</u>**

துவாக்குடி நகராட்சியில் அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் குடிநீர் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ள பணி உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் தற்போது நடைபெற்று வருகிறது. மேற்படி பணியில் பொதுமக்களுக்கு வழங்கப்படும் புதிய வீட்டு குடிநீர் இணைப்புகளுக்கு ஒப்பந்ததாரருக்கு தொகை வழங்குவதற்கு மதிப்பீட்டில் வழிவகை செய்யப்படாததால் புதிய குடிநீர் இணைப்பு வழங்கப்படும் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் வைப்பு தொகையிலிருந்து ஒப்பந்ததாரருக்கு தொகை வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு** : - மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண். 984/2022/இ1**

**தீர்மானம் : 498 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 28</u>**

துவாக்குடி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கழிவு நீர் நச்சுத்தொட்டிகளை (Septic Tank) பாதுகாப்பான முறையில் சுத்தம் செய்யவும், பாதுகாப்பற்ற முறையில் சுத்தம் செய்யப்படுவது குறித்து புகார் தெரிவிக்கவும் கட்டணமில்லா தொலைபேசி எண். 14420 அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதை பொது மக்கள் அறியும் வகையில் விழிப்புணர்வு ஏற்படுத்த நகராட்சி பகுதியில் மழையினால் சேதமடையாத ஆயில் பெயிண்ட் மூலம் சுவர் விளம்பரங்கள் வரைய உண்டான உத்தேச செலவினம் ரூ. 90,000/- க்கும், மேற்கண்ட செலவினத்தை நகராட்சியின் பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு** : -

கழிவு நீர் நச்சுத்தொட்டிகளை (Septic Tank) பாதுகாப்பான முறையில் சுத்தம் செய்வது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணியின் அவசியம் கருதி உள்ளூர் விலைப்புள்ளி கோரி பணி மேற்கொள்ளவும், செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண். 060/2023/எச்1**

**தீர்மானம் : 499 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 29</u>**

துவாக்குடி நகராட்சி வார்டு எண்.12 வ.உ.சி நகர் பகுதியில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள நூலகம் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கு ஏதுவாக நூலகத்தின் பாதுகாப்பு கருதி நூலக வளாகத்தை சுற்றியும் மின்விளக்குகள் பொருத்தும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ. 4.50 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு** : - மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண். 307/2024/இ1**

**தீர்மானம் : 500 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 30</u>**

துவாக்குடி பேரூராட்சியிலிருந்து நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு வரப்பெற்ற அரசாணை விபரம் மற்றும் நகராட்சியில் பணிபுரிந்த ஆணையர்கள் மற்றும் நகராட்சியில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நகர்மன்ற தலைவர்கள் விவரத்தினை மரப்பலகையில் எழுதி நகராட்சி அலுவலகத்தில் வைக்கும் பணி மேற்கொள்ள விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு மூன்று நிறுவனங்களிடமிருந்து வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்

| வ. எண். | பணி விபரம் | எண்ணிக்கை | விலைப்புள்ளி வழங்கியவர்கள் | | |
|---|---|---|---|---|---|
| | | | JM stickers (Rs.) | Eraivan Stickers (Rs.) | S.K. Stickers (Rs.) |
| 1 | நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு வரப்பெற்ற அரசாணை விபரம் மற்றும் ஆணையர்கள், நகர்மன்ற தலைவர் விபரத்தினை மரப்பலகையில் எழுதி நகராட்சி அலுவலகத்தில் வைக்கும் பணி செய்தல் | 3 | 59900 | 61500 | 63000 |

**அலுவலக குறிப்பு** : - மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.287/2024/எச்1**

**தீர்மானம் : 501 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 31</u>**

துவாக்குடி நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் நோய் தடுப்பு பணிகள் மேற்கொள்ள 2023-24ம் நிதியாண்டிற்கு தேவையான கிருமி நாசினிகள் வாங்குவதற்குண்டான விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு மூன்று நிறுவனங்களிடமிருந்து வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்

| வ. எண். | விவரம் | Honest Traders | Five Star Traders | Tamilan Suppliers |
|---|---|---|---|---|
| 1 | பினாயில் | 76 (GST 18%) | 78 (GST 18%) | 80 (GST 18%) |
| 2 | டாய்லட் கிளினர் | 196 (GST 18%) | 200 (GST 18%) | 205 (GST 18%) |
| 3 | ஆசிட் | 65 (GST 18%) | 69 (GST 18%) | 70 (GST 18%) |

**அலுவலக குறிப்பு** : - மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண். 791/2023/எச்1**

**தீர்மானம் : 502 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 32**

துவாக்குடி நகராட்சியின் பொது சுகாதார பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ள பயன்படுத்தப்பட்டு வரும் டிப்பர் லாரி வாகனம் எண். TN45AY 0474 வாகனத்தின் வாகன விபத்து காப்பீடு முடிவடைய உள்ளதால் வாகன காப்பீட்டினை புதுப்பிப்பதற்கு "UNITED INDIA INSURANCE COMPANY LTD" நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற பில்பட்டியல் படி ரூ. 30,935/- தொகையினை செலுத்துவதற்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு.

**அலுவலகக்குறிப்பு:**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்: 479 / 2023 / எச்1**

**தீர்மானம் : 503 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 33**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை அரசாணை எண் (நிலை).10 நாள்.23.01.2023ன் படி நகராட்சிகளின் நிலைகளுக்கேற்ப பணியாளர்கள் (Norms) நிர்ணயம் செய்யப்பட்டு தற்போது இந்நகராட்சியில் கூடுதலாக பணியாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளதால் அலுவலகத்திற்கு கூடுதலாக கணினிகள் வாங்க வேண்டியுள்ளது. மேலும் இந்நகராட்சி கடந்த 2010ஆம் ஆண்டு முதல் இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு அலுவலகப்பணிகளுக்கான வாங்கி பயன்படுத்தப்பட்டு வந்த கணினிகள் 10 வருட காலத்திற்கு மேலாக இயங்கி வருவதால் தற்போது கணினிகள் பழுதடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. எனவே கணினி பணியின் முக்கியத்துவம் கருதி இந்நகராட்சிக்கு புதியதாக கணினிகள் வாங்குவதற்கு விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு மூன்று நிறுவனங்களிடமிருந்து வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்

| வ. எண். | விவரம் | Rajan Systems (Rs.) | Opel System (Rs.) | Bestech Computers (Rs.) |
|---|---|---|---|---|
| 1 | IntelCore i3 system/8GB ddr ram/512GB SSD/19" dell monitor/ keybord/mouse/Pre loaded Win 10 professional 64 Bit | 56610 | 58210 | 57420 |
| 2 | HP 329 DN Laserjet Printer | 55710 | 57440 | 56810 |
| 3 | Numeric 1 KVA offline ups with 40 mins battery backup | 9500 | 9900 | 9750 |
| 4 | Canon LBP 2900 Laserjet Printer | 24210 | 25300 | 24900 |
| 5 | Dlink 5 Port Gigabyte Ethernet Switch | 4000 | 4200 | 4400 |
| 6 | Dlink 8 Port Gigabyte Ethernet Switch | 4800 | 5100 | 5200 |
| 7 | Image king 88A tonner cartridge | 1200 | 1350 | 1250 |
| 8 | Rapoo Keyboard | 1000 | 1150 | 1100 |
| 9 | Dell optical mouse | 500 | 550 | 550 |
| 10 | CP Plus 4G LTE Router modem | 3500 | 3800 | 3800 |

**அலுவலக குறிப்பு** : - மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண். 1602/2023/இ1**

**தீர்மானம் : 504 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 34**

துவாக்குடி நகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள கீழ்நிலை நீர்த்தேக்கத்தொட்டியில் அருகில் மூங்கில் மர வேர்கள் நுழைந்து அதனை சுத்தம் செய்ய இயலாத நிலையில் மிகவும் பழுதடைந்துள்ளதால் சுகாதார கேடு ஏற்படும் நிலையில் உள்ளதால் அதன் அருகில் புதிய HDPE TANK பொருத்தி அதில் நீர் நிரப்பி அலுவலகத்தின் தொட்டிக்கு ஏற்றும் பணிக்கு கீழ்கண்ட விவரப்படி விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் விபரம் | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி |
|---|---|---|---|
| 1 | நகராட்சி அலுவலக வளாகத்தில் புதிய HDPE TANK பொருத்தி அதில் நீர் நிரப்பி அலுவலகத்தின் தொட்டிக்கு ஏற்றும் பணி செய்தல் | M/s. KURUNI ENTERPRICES<br>M/s. AQUA CURE 2 PURE TECHNOLOGIES<br>M/s. NRKV TECH | ரூ 1,49,890/-<br>ரூ. 1,51,848/-<br>ரூ. 1,52,633/- |

**அலுவலக குறிப்பு**:- மன்றம் அனுமதி வழங்கலாம்.
**ந.க.எண். இ1/1890/2023**
**தீர்மானம் : 505 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**
**<u>பொருள் எண். 35</u>**

துவாக்குடி நகராட்சி பகுதியில் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளிகள் இரண்டும், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி ஒன்றும் மற்றும் அரசு உயர்நிலைப்பள்ளி ஒன்றும் செயல்பட்டு வருகிறது. மேற்கண்ட பள்ளிகள் ஊராட்சி ஒன்றிய குழுவின் 30.08.2023 -ம் தேதிய சாதாரணக் கூட்ட தீர்மானம் எண். 192 நாள். 30.08.2023 -ன்படி துவாக்குடி நகராட்சிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள் பள்ளியின் கழிவறைகள் மற்றும் வளாகங்களை தூய்மை செய்வதற்கு தூய்மை பணியாளர்களை நியமனம் செய்ய கோரி விண்ணப்பம் அளித்துள்ளனர். எனவே மேற்கண்டவாறு நான்கு பள்ளிகளுக்கும் பள்ளிக்கு ஒரு தூய்மை பணியாளர் வீதம் நான்கு தூய்மை பணியாளர்களை ஒப்பந்த நிறுவனம் மூலம் நியமிக்கவும், அதற்குண்டான உத்தேச செலவினம் ரூ. 9.90 லட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**: மன்றம் அனுமதி வழங்கலாம்.
**ந.க.எண்: 1089 / 2021 / இ1**
**தீர்மானம் : 506 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**
**<u>பொருள் எண். 36</u>**

துவாக்குடி நகராட்சியின் 2011 - ம் ஆண்டின் மக்கள்தொகை கணக்கின்படி மக்கள்தொகை 38875 ஆகும். மொத்த வார்டுகளின் எண்ணிக்கை 21 ஆகும். இந்நகராட்சியானது 14.371 சதுர கிலோமீட்டர் உள்ளது. இந்நகராட்சியானது தேர்வுநிலை பேரூராட்சியாக செயல்பட்டு வந்த நிலையில், அரசாணை எண். 277, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) நாள்.02.07.2004-ம் தேதியிலிருந்து மூன்றாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு, தற்பொழுது அரசாணை எண். 154, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) நாள். 09.08.2010-ன் படி இரண்டாம் நிலை நகராட்சியாக செயல்பட்டு வருகிறது.

ஆரம்ப காலத்தில் பேரூராட்சியாக இருந்து தற்பொழுது இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்ட நிலையில் சொத்துவரியில் வசூல் செய்யப்படும் சொத்துவரியில் உட்பிரிவுகளாக (Component wise Rate of Tax) பிரிக்கப்படவில்லை. தற்பொழுது சொத்துவரி கணக்கீட்டு தாளில் சொத்துவரியில் வசூலிக்கப்படும் உட்பிரிவுகள் கீழ்கண்டவாறு பிரிக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| பொதுக்காரியம் (GP) | = | 10.00 |
| நூலக வரி (LC)(GPx10%) | = | 1.00 |
| | | ---------- |
| மொத்தம் | = | 11.00 |
| | | ---------- |

மேற்காணும் தொகையானது இந்நகராட்சியின் சொத்துவரியில் தற்சமயம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள வகைபாடாகும். இந்நகராட்சியில் மொத்தம் 8759 சொத்துவரி விதிப்பு எண்களும், 187 காலியிட வரிவிதிப்பு எண்களும் உள்ள நிலையில் மேற்கண்டவாறு உட்பிரிவுகள் பிரிக்கப்பட்டு நடைமுறையில் உள்ளது. தற்போது நகராட்சிக்குட்பட்ட

பகுதிகளில் இயங்கி வந்த ஊராட்சி பராமரிப்பில் உள்ள பள்ளிகள் நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளதால் பள்ளிகள் பராமரிப்பு நகராட்சி மூலம் பராமரிக்கப்படவேண்டியுள்ளது. மேலும், மற்ற நகராட்சிகளில் சொத்துவரி மற்றும் காலியிட வரிவிதிப்பில் வசூல் செய்யப்படும் தொகையில் உட்பிரிவுகள் பிரிக்கப்பட்டு அந்தந்த உட்பிரிவுகளின் கீழ் நிதி பங்கீட்டின்படி பயன்படுத்தப்பட்டு வருகிறது. அதுபோல் இந்நகராட்சியிலும் சொத்துவரி மற்றும் காலியிட வரியில் கீழ்கண்டவாறு உட்பிரிவுகளை (Component wise Rate of Tax) பிரித்துக்கொள்ளலாம்.

சொத்துவரி மற்றும் காலியிட வரி வசூலின் உட்பிரிவு

| | | |
|---|---|---|
| 1. | பொதுக்காரியம் (General Purpose) | 2.00 % |
| 2. | குடிநீர் மற்றும் கழிவுநீர் வடிகால் (Water and Drainage Tax) | 2.00 % |
| 3. | சுத்திகரிப்பு வரி (Scawanging Tax) | 2.00 % |
| 4. | விளக்கு வரி (Lighting Tax) | 1.50 % |
| 5. | கல்வி வரி (Education Tax) | 2.50 % |
| 6. | நூலக வரி (LibraryCess) | (அடிப்படை வரியில் 10.00%) - 1.00% |
| | நிகர மொத்தம் | 11.00 % |

**<u>சொத்துவரி மற்றும் காலியிட வரி கணக்கீட்டுத்தாள்</u>**

| | | | |
|---|---|---|---|
| 1. | அடிப்படை வரி | 1) பொதுக்காரியம், சுத்திகரிப்பு வரி மற்றும் விளக்கு வரி | **5.50 %** |
| | | 2)குடிநீர் மற்றும் கழிவுநீர் வடிகால் வரி | **2.00 %** |
| | | 3) கல்வி வரி | **2.50 %** |
| | | மொத்தம் | **10.00 %** |
| 2. | நூலக வரி | அடிப்படை வரியில் 10% | **1.00 %** |
| | | மொத்தம் | **11.00 %** |

எனவே, மேற்காணும் உட்பிரிவுகளை அந்தந்த விகிதத்தின் அடிப்படையில் பிரிப்பதன் மூலம் இந்நகராட்சியின் வருவாய் நிதி , குடிநீர் மற்றும் வடிகால் நிதி மற்றும் கல்வி நிதி என மூன்று கணக்குகள் பிரித்து கணக்கீடு செய்ய ஏதுவாக அமையும். மேலும், நகரின் சாலை வசதிகள் ஏற்படுத்துதல், கழிவு நீர் வடிகால் அமைத்தல், குடிநீர் வசதிகள் ஏற்படுத்துதல் மற்றும் பராமரித்தல் , மின்கட்டணம் செலுத்தவும், நகரின் வளர்ச்சி பணிகளுக்கு முக்கியத்துவமாக அமைகிறது. எனவே, மேற்காணும் உட்பிரிவுகளை 1920-ம் வருடத்திய மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 78-ன் உட்பிரிவு 3-ல் கண்டுள்ளபடி வரிவிதிப்பு விகிதத்தை (Rate of Taxation) நிர்ணயம் செய்யவும், மேற்படி உட்பிரிவினை வரும் 01.04.2024 முதல் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டு நடைமுறையில் வசூலிக்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு..

1) அனுமதிக்கலாம்.
2) 01.04.2024 முதல் நடைமுறைக்கு கொண்டு வரவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்: 189 / 2024 / அ1**

**தீர்மானம் : 507 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 37</u>**

துவாக்குடி நகராட்சிக்கு சொந்தமான நுண் உரம் தயாரிக்கும் மையம் MCC, OCC மற்றும் பூங்கா மற்றும் ராவுத்தான்மேடு, வ.உ.சி நகர் மற்றும் முத்துராமலிங்க தேவர் சாலையில் சமுதாய கூடங்கள் உள்ளது. மேற்படி இடங்களுக்கு நகராட்சி மூலம் பாதுகாப்பு பணியாளர்கள் நியமிக்கப்படாததால் சமூக விரோதிகளால் மேற்படி இடங்கள் சேதபடுத்தியும், சமூக விரோத செயல்களும் மேற்கொண்டு வருவதாக தெரியவருகிறது. மேற்படி நகராட்சிக்கு வருவாய் தரத்தக்க மூன்று சமுதாய கூட இனங்களுக்கு பாதுகாப்பு பணியாளர்கள் இல்லாத பட்சத்தில் நகராட்சி சொத்துக்களை சேதப்படுத்தி பராமரிப்பு செலவினம் ஏற்படும் நிலை உள்ளது.

மேலும், மேற்படி இடங்களை பாதுகாக்க இந்நகராட்சியில் போதிய பணியாளர்கள் எவரும் இல்லை. அதனால் தனியார் மூலம் (Out Sourcing) நுண் உரம் தயாரிக்கும் மையம், OCC, பூங்கா மற்றும் சமுதாய கூடத்திற்கு 2023-ம் ஆண்டின் மாவட்ட ஆட்சித்தலைவர், திருச்சிராப்பள்ளி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட விலைவிகிதத்தின் அடிப்படையில் 6 பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கவும், நகராட்சி வருவாய் மூலதன நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு..**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) நகராட்சி சொத்துக்களின் பாதுகாப்பு கருதி தனியார் மூலம் (Out Sourcing) ஒப்பந்த அடிப்படையில் 6 பணியாளர்களை 08/2023 வரை நியமித்து பணி மேற்கொண்டதை தொடர்ந்து 01/2024 வரை அதே ஒப்பந்த அடிப்படையில் பணி மேற்கொண்டு செலவினம் மேற்கொள்ளப்பட்டதற்கும் தொடர்ந்து 08/2024 வரை ஒப்பந்த அடிப்படையில் பணி மேற்கொள்ளவும் கால நீட்டிப்பிற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 1277/2022/அ1**

**தீர்மானம் : 508 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

(ஒம்) திரு. இ. காயாம்பு,

**நகர்மன்றத்தலைவர்,**
**துவாக்குடி நகராட்சி.**

**/ உண்மை நகல் /**

**ஆணையர்,**
**துவாக்குடி நகராட்சி.**